

முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில், பூவிருந்தவல்லியில் நடைபெற்று வரும் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் சிலை வடிவமைக்கும் பணிகளை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய

அணி முன்னாள் துணை அமைப்பாளர்

# எம்.ஆர்.வெங்கடேசன் நினைவு நாள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, நவ. 10 -

எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் சொ.வேலு முன்னிலையில் MRVR. பரத் பகுதி துணை அமைப்பாளர் விளையாட்டு அணி ஏற்பட்டில் முன்னாள் சென்னை கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் எம்.ஆர். வெங்கடேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சின்னத்தம்பி தெருகுயப்பேட்டையில் பொது மக்களுக்கு உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கோ.ஏகப்பன் (மாவட்ட அவைத்தலைவர்). புரசை. கோ.மணி (பொதுக்குழு உறுப்பினர்), வட்ட கழக செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு, சி.சேகர், ரங்கநாதன், V.அபாய், தி.தயாளன், புலவர் சாமிநாதன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!

நல்ல சிந்தனை

முயற்சி என்னும் படிக்கட்டில் ஏறினால் தான் வெற்றி என்னும் இலக்கை அடைய முடியும்.

gkaruppu

- பேரறிஞர் அண்ணா

நவ.27. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## ஆதி திராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!





சென்னை,நவ.10-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று (09-11-2025) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர்ஏ. இராமலிங்கம் அவர்கள் தலைமையில், துணைத்தலைவர் மாண்புமிகு அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா. துரைசாமி, மு.பொன்தோஸ், மு. பரமானந்தம், சி. தசரதன், சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் ஆதிதிராவிடர் நலக்குழுவின் ஆக்கப் பணிகள் குறித்து உரையாற்றினார்.

சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட இரங்கல் தீர்மானம் வருமாறு:-

1. 23.10.2025 அன்று உடல்நலக் குறைவால் நம்மை விட்டு மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுசாமி அவர்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:-

2025 செப்டம்பர் 17 ஆம் நாள் கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் திரு. மருதூர் இராமலிங்கம் அவர்களுக்கு பேராசிரியர் விருது வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரி வித்துக் கொள்கிறோம்.

நவம்பர் 27-ல், பிறந்தநாள் காணும் நமது கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, ஏழையெளி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும்.

### கரூரில் நெரிசலில் சிக்கி பலியானவர்களுக்கு இரங்கல்!

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. கரூரில் ஒரு நடிகரின் கட்சி நடத்தி பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் சிக்கி உயிரிழந்த செய்தி அறிந்த சில மணி நேரங்களில் போர்க்கால நடவடிக்கை எடுத்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா பத்து லட்ச ரூபாய் நிவாரணநிதி அளிக்கப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல், நள்ளிரவே கரூருக்குச் சென்று, ஆய்வு செய்ததுடன், உயிரிழந்த 40 பேரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

### கண்ணகி நகர் வீராங்கனைக்கு பாராட்டு!

சென்னை, கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதியின் பிம்பத்தையே மாற்றியமைக்கும் ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் 18 வயது கபடி வீராங்கனை கார்த்திகா. அண்மையில் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய இளைஞர் விளை யாட்டுப் போட்டிகளில் இந்திய மகளிர் கபடி அணியின் துணைத் தலைவராக தங்கம் வென்று, நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது. மேலும் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இந்திய கபடி போட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தை சார்ந்த அபினேஷ் என்ற வீரர் தங்கம் வென்று, மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

### சாதி பெயர்களை நீக்கியதற்கு நன்றி!

தமிழ்நாட்டில் தெருக்களில் உள்ள சாதி பெயர்களை நீக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

(SIR) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு என்ற பெயரில் ஆதிதிராவிடர்கள் மற்றும் சிறுபான்மை யினர் வாக்குகளை திருட நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, தத்தமது பகுதிகளில் உள்ள கழக

BLA-2களுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி(SIR)களில் ஈடுபட்டு ஒவ்வொரு வாக்காளரையும் சேர்த்திடும் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

மீ.அ.வைதியலிங்கம் தலைமை! ஆர். சுந்தரமூர்த்தி வரவேற்புரை! SIRஐ கண்டித்து

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற கூட்டணிக்கட்சிகளின் சார்பில்

# செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## பொருளாளர் டி.ஆர்.பாலு – அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டன உரை!

சென்னை,நவ.10-

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல்(S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக் கோரியும் ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ணையம் தமிழ்நாட்டில் (S.I.R) செயல்படுத்துவதை கண்டித்தும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற கூட்டணிக்கட்சிகளின் சார்பில் செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பட்டம் நாளை 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பழைய பேருந்து நிலையம் அருகில், செங்கல்பட்டில் கழக தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.சுந்தரமூர்த்தி வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து மனித நேய மக்கள் கட்சி மாநில தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ கண்டன உரையாற்றுகிறார்.

இதில் ம.தி.மு.க.உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் சு.ஜீவன், தி.மு.க பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., விடுதலை சிறுத்தைகள் மாநில துணைப் பொதுச் செயலாளர் எஸ்.எஸ். பாலாஜி எம்.எல்.ஏ., க.பீம் ராவ், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைச்செயலாளர் எம்.யாக்கூப், மனித நேய மக்கள் கட்சி மாநில பிரதிநிதி எஸ்.எம்.ஷாஜகான, CPIM மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் இ.சங்கர், CPIM மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் ஜி.ராமகிருஷ்ணன், மாநில CPIM குழு உறுப்பினர் இ.முத்துக்குமார், மாநில CPIM செயற்குழு உறுப்பினர் கே.சுவாமிநாதன், திராவிடர் இயக்க தமிழர் பேரவை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் இ.இளமாறன், மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி, மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் து.மூர்த்தி, மாவட்ட தி.மு.க. பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற கூட்டணி கட்சித் தலைவர்கள் ஆர்.எஸ்.செந்தில்குமார், சைதை சுப்பிரமணியன், பாரத் ராஜேந்திரன், கே.நேரு, எஸ்.பீர்முகமது, எஸ்.அல்லா பக்ஷ, திருமோ தமிழரசன், கனல்விழி, எஸ்.கே.ஜாகீர் உசேன், வேலூர் பாண்டு, கே.வி.திலகர், மா.வை.மகேந்திரன், இரா.வேல்முருகன், ஏ. ராஜ்குமார், எஸ்.முகமது பேக், சைதை.ம.ஜேக்கப், கு.தென்னவன், ஜெ.சலீம் கான், ஏ.எஸ். முகமது ரபி, செம்பியன், என். லட்சுமணன், எஸ்.ஜெ.ரிக்கோலஸ், பூ.லோகநாதன், ப.சு. பாரதி, பா.கார்த்திக், கே.ஷேக் தாவூத், ப.சாமுவேல் எபினேசர், மேனகாதேவி கோமகள், டி.முகமத் யூசுப், பா.முத்தையன், ப.முருணை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் தி.மு.க மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட-மாநகர-ஒன்றிய-நகர, பகுதி- பேரூர் செயலாளர்கள், தலைவர்கள், மற்றும் நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.

செங்கல்பட்டு நகர தி.மு.க. செயலாளர் எஸ்.நரேந்திரன் நன்றியுரையாற்றுகிறார்.

# ஆரணி பேரூரில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர் சரிபார்த்தல் பணி:

## பேரூர் செயலாளர் பி.முத்து – எஸ்.ரோஸ்பொன்னையன் பங்கேற்பு

திருவள்ளூர், நவ. 10 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி ஆரணி பேரூர் திமுக கழகத்தின் சார்பில் வார்டு 12 பாகம் 252 வாக்காளர் படிவம் சரிபார்த்தல் SIR வாக்காளர் சேர்த்தல் நீக்கல் நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகத்தின் பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் அறிவுறுத்தலின் பேரில் பேரூர் கழகத்தின் செயலாளர் பி. முத்து தலைமையில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ரோஸ் பொன்னையன் மற்றும் ஆரணி பேரூர் திமுக கழகத்தின் பொருளாளர் ஜி. கரிகாலன் முன்னிலையில் BLO அரசு அதிகாரி எம் லட்சுமி ஆகியோருடன் சேர்ந்து சரிபார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் BLA 2 டைலர் பழனி பொன்னேரி தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஜி. சந்தோஷ் பிரபா, ஆரணி பேரூர் சிறுபான்மையணி அமைப்பாளர் எம். சுல்தான், வார்டு செயலாளர்கள் ஏ சூர்யா, சாலேக், எல்.உதயகுமார், ஜெ.மகேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்

### நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டேன்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பிரானவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டத்தில் S.i.R. சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினை பாகம் 124 இல் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. லட்சுமிபுரம் சத்தியமூர்த்தி தெருவில் ஆய்வு மேற்கொண்டார். உடன் பி. எல். ஓ. ஹேமாவதி, வட்ட செயலாளர் டி. சுந்தரம், பி எல் ஓ 2 வி. பாஸ்கர், கே. நரேந்திரன், என். எஸ். ராஜு, அபிப் ரகுமான், ஆர். ஆர் .பங்கூஷின், ஜெயபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்.4 க்கு உட்பட்ட 56,வது வார்டு பெருங்களத்தூர் பீர்க்கன்காரணை ஒரு பகுதி பார்வதி நகரில் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் பாலாற்று குடிநீருக்காக பைப் லைன்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அதிகாரிகளும் மற்றும் ஊழியர்களும் உடனிருந்தனர்.